முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 04.09.2025.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 8/2024**

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஏழுமலை | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | பொன்னுசாமி | வயது | : | 70 |
| ஊர் | : | பகவந்தபுரம் | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 1 (ஏழுமலை): வாதி தரப்பில் முதல் சாட்சியின் முதன்மை விசாரணை:**

நான் இவ்வழக்கில் **வாதி தரப்பு முதல் சாட்சி (வா.சா.1) ஆவேன்.** எனது வாக்கு மூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். எனக்கு எழுத படிக்க தெரியாது. இதில் உள்ள சங்கதிகள் வழக்கறிஞர் படித்துக் காண்பிக்க அதை புரிந்துகொண்டு நான் கையொப்பம் இட்டேன்.

**கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

1. 05.02.1972 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் இணையம் மூலம் வழங்கப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 16.04.2012 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரத்தின் இணையம் மூலம் வழங்கப்பட்ட சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 29.10.2023 தேதியில் வாதி, பிரதிவாதிகளுக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பினை 1,3,5,6 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் அசல் (எண்ணிக்கை-4) **வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பினை 2, 4 பிரதிவாதிகள் அஞ்சல் உறையில் குறிப்பிட்ட விலாசத்தில் இல்லாததால் திருப்பப்பட்ட அஞ்சலக உறைகள் அசல் **வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 05.12.2023 தேதியில் 6ம் பிரதிவாதி கொடுத்த பதில் வழக்கறிஞர் அறிவிப்பின் அசல் **வா.சா.ஆ. 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எனது தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

(பிரதிவாதிகள் நீதிமன்றத்தால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளனர்)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.09.04 16:45:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு